தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை : 100/= இதழ் 109 11.05.2025

கடனாளியை முதலாளியாக்கும் நிதி மேலாண்மை

- கற்றாழைப் பயிர்ச்செய்கை
- வீட்டுத் தோட்டத்தை பாதுகாப்பது எப்படி?
- சிரட்டைக்குள்ளிருந்து பிறந்த வாழ்வாதாரம்
- நமது நிதி அறிவை மேம்படுத்துவது எப்படி? – வழிகாட்டும் தமிழர் பொருண்மியம்
- இலங்கையின் ழீசு முடிவு பொருளாதார தாக்கங்கள் மற்றும் துறைசார் தாக்கம்
- பார்வை

கற்றாழைப் பயிர்ச்செய்கை

கற்றாழை (Aloe vera) பூக்கும் தாவர இனத்தைச் சேர்ந்த ஒரு பேரினமாகும். தமிழில் இந்தத் தாவரம் கற்றாழை, கத்தாளை, குமரி, கன்னி எனவும் சிங்களத்தில் கோமாரிக்கா எனவும் அழைக்கப்படுகிறது. இது ஆற்றங்கரைகளிலும், சதுப்பு நிலங்களிலும், தோட்டங்களிலும் வளரக்கூடிய பயிராகும். நுனியில் பெரும்பாலும் சிறு முட்களுடன் காணப்படும். மடல், வேர் ஆகியவை மருத்துவப் பயனுள்ளவை. அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பில் கற்றாழை பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது.கற்றாழை லில்லியேசியே தாவர குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஆப்பிரிக்காவைத் தாயகமாகக் கொண்டது

இது மிகவும் வரட்சியைத் தாங்கி பிடிக்க கூடிய நீர்த்தேவை குறைவான வெப்பமண்டல தாவரமாகும், இலங்கையின் உலர் வலயம் மற்றும் இடைவெப்ப வலயங்களில் பயிரிடப்படலாம். கற்றாழை தாவரம்அதன் மருத்துவ மதிப்பு காரணமாக உலகில் மிகவும் பிரபலமானது.

கற்றாழைக்கு தேவையான காலநிலை:

அடிப்படையில், ஒரு சூடான வெப்பமண்டல பயிர். கற்றாழை பல்வேறு காலநிலை நிலைகளில் வளரக்கூடியது. குறைந்த மழை பெய்யும் பகுதிகளிலும், வறண்ட பகுதிகளிலும் சூடான ஈரப்பதனுடைய சூழலில் இதை வெற்றிகரமாக வளர்க்கலாம். இந்த தாவரம் அதிக குளிர் நிலைகளுக்கு மிகவும் உணர்திறன் கொண்டது. குறைந்த மழை எதிர்பார்க்கப்படும் பகுதிகளில் வறண்ட மணல் மண்ணில் இந்த தாவரம் சிறப்பாக வளர்கிறது. இந்த தாவரம் பனி மற்றும் குளிர்ந்த காலநிலை நிலைகளை உடைய இடங்களில் சிறப்பான முறையில் வளர்க்க முடியாது.

கற்றாழை பயிருக்கான மண் தேவை

கற்றாழை மணல் மண்ணிலிருந்து களிமண் வழங்கல் வரை பல வகையான மண்ணில் பயிரிடப்படக்கூடியது. இருப்பினும், இது வண்டல் மண்ணில் சிறப்பாக வளர்கிறது. இந்த தாவரம் நீர் தேக்க நிலைக்கு உணர்திறன் கொண்டிருப்பதால், அதன் பயிர்ச் செய்கைக்கு நன்கு நீர் ஊடு வடியக் கூடிய மண்ணைத் தேர்ந்தெடுப்பது

வெற்றியளிக்கும். இந்த தாவரம் 8.5 வரை அதிக pH இணைத் தாங்கி வளரக்கூடிய இயல்புகளைக் கொண்டுள்ளது.

கற்றாழையை நடுகை முறை

கற்றாழையானது விவசாயத்தில், வேர் உறிஞ்சிகள் / துண்டாக்கப்பட்ட வேர்த்தண்டுக்கிழங்கு வெட்டல் மூலம் (root suckers/rhizome cuttings) நடுகை பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. வேர் உறிஞ்சிகளை நடுகை செய்வதற்கு தெரிவு செய்யும்போது நடுத்தர அளவிலான வேர் உறிஞ்சிகளைத் தேர்ந்தெடுத்து, வேரின் அடிப்பகுதியிணை தாய் செடியை சேதப்படுத்தாமல் கவனமாக தோண்ட வேண்டும். இதை நேரடியாக பிரதான நிலத்தில் நடலாம். வேர்த்தண்டுக்கிழங்கு வெட்டுதல் பரப்புதல் ஏற்பட்டால், பயிர் அறுவடை செய்தபின், நிலத்தடி வேர்த்தண்டுக்கிழங்கை தோண்டி, 6 செ.மீ நீளமுள்ள துண்டுகளை இரண்டு முதல் மூன்று முனைகளுடன் உருவாக்கவும். தயாரிக்கப்பட்ட மணல் படுக்கைகளில் இவற்றை வைக்கவும். முளைகள் தோன்றியவுடன், இவற்றை பிரதான நடுகை நிலத்தில் இடமாற்றம் செய்யுங்கள். வழக்கமாக, 1 ஏக்கர் நடுகைக்கு சுமார் 15000 உறிஞ்சிகள் தேவைப்படுகின்றன.

நிலம் தயார்படுத்தல்

மண்ணை நன்றாக தூர்வைப்படுத்தி நடுகைக்குரிய சூழ்நிலைக்கு கொண்டு வர நிலத்தை நெடுக்காக உழுது பின்னர் குறுக்கு உழவு செய்ய வேண்டும். மண்ணின் வளத்தை அதிகரிக்க, கடைசி உழுதலின் போது சுமார் 15 முதல் 20 டொன் நன்கு உக்கிய பண்ணை உரம் மாட்டுச்சாணம் கொம்போஸ்ட் அல்லது மக்கிய கோழி எரு சேர்க்கவும். 40 செ.மீ இடைவெளியில் வரப்பு போன்ற அமைப்புகளை உருவாக்கி சால்களையும் ஏற்படுத்த வேண்டும். உறிஞ்சிகளை 40 செ.மீ தூரத்தில் நடவு செய்ய வேண்டும்.

கற்றாழையின் நடுகை இடைவெளி

ஒரு ஹெக்டேருக்கு சுமார் 50,000 முதல் 55,000 தாவரங்களுக்கு வளர்ச்சிக்கு போதுமான அளவு இடமளிக்க, தாவரங்களுக்கு இடையிலான இடைவெளி 40 x 45 செ.மீ (அல்லது) 60 x 30 செ.மீ இடைவெளி காணப்பட வேண்டும்.

கற்றாழை தாவரங்களுக்கு நீர்ப்பாசனத் தேவை

கற்றாழை பயிர் வருடாந்த மழைவீழ்ச்சியின் கீழ் மானாவாரியாக மற்றும் நீர்ப்பாசனம் வழங்கப்படக் கூடிய நிலைமைகளின் கீழ் வளர்க்கப்படலாம். உறிஞ்சிகளை நட்ட உடனேயே நீர்ப்பாசனம் மேற்கொள்ள வேண்டும். வெப்பமான கோடை காலநிலையில் ஓரிரு நீர்ப்பாசனங்கள் நல்ல விளைச்சலை விளைவிக்கும். மழைக்காலத்தில், இந்த பயிர் நீர் தேக்க நிலைக்கு உணர்திறன் கொண்டிருப்பதால் வயலில் நீர் வெளியேறுவதை கருத்தில் கொள்ளவும். மேலதிக நீர் வடிந்து செல்வதற்காக சாலைகளை ஏற்படுத்த வேண்டும்.

களைக் கட்டுப்பாடு / இடைநிலை முகாமைத்துவ செயற்பாடுகள்

கற்றாழை பயிரின் முகாமைத்துவத்தின் போது விவசாயத்தில் இடை கலாச்சார நடவடிக்கைகளில் பகுதி பகுதியாக, தாவரங்களுக்கும் அணைப்பதன் மூலம் பூமி உயர்த்தப்பட வேண்டும். களைகள் முறையான இடைவெளியில் அகற்றப்பட வேண்டும்.

கற்றாழை தாவரங்களுக்கான சேதன மற்றும் இரசாயன பசளை பாவனை

நிலம் தயார்படுத்தலின் போது ஒரு பகுதியாக நன்கு உக்கிய பண்ணை உரம் ஹெக்டேருக்கு 15 முதல் 20 டன் வரை பயன்படுத்துங்கள். அதன்பிறகு ஒவ்வொரு ஆண்டும் அதே அளவு பண்ணை எரு பயன்படுத்த வேண்டும். ஹெக்டேருக்கு 50:50:50 கிலோ என்ற விகிதத்தில் N.P.K போன்ற இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

கற்றாழையில் பீடை தாக்கம் மற்றும் நோய்கள்

கற்றாழை துரு நோய், பகுதியான தண்டழுகல் மற்றும் பாக்டீரியா மென் அழுகல் ஆகியவை கற்றாழை பயிர்ச்செய்கையில் காணப்படும் பொதுவான நோய்கள். கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு, உங்கள் அருகிலுள்ள விவசாயத் திணைக்கள விவசாய போதனாசிரியரை தொடர்பு கொள்ளலாம்.

கற்றாழை அறுவடை

கற்றாழை பயிர் நடுகை செய்த இரண்டாம் வருடத்லிருந்து அறுவடைக்கு தயாராகிவிடும். 3 அல்லது 4 நன்றாக வளர்ந்த பெரிய புதிய இலைகளை அறுவடைக்காக எடுக்கலாம். அறுவடை ஆனது காலை அல்லது மாலை நேரங்களில் செய்யப்பட வேண்டும். ஒரு வருடத்தில் மூன்று அறுவடைகளை மேற்கொள்ளலாம். இந்த பயிர் விளைச்சல் மிகுந்த பயிர். இலைகளை அறுவடை செய்தபின், அவை நடவு செய்த 5 ஆண்டுகள் வரை மீண்டும் உருவாக்கப்படுகின்றன. இலைகளை மட்டுமல்ல, பக்க உறிஞ்சிகளையும் நடவுப் பொருட்களில் பயன்படுத்த அறுவடை செய்யலாம்.

கற்றாழை அறுவடை மற்றும் அறுவடைக்கு பின்னான முகாமைத்துவம்

கற்றாழையின் வேர் மற்றும் சதைப்பிடிப்பான நன்கு வளர்ந்த இலைகள் அறுவடை பெற்றுக் கொள்ளப்படுகின்றன. அறுவடை ஆனது ஆரம்பிக்கப்பட முன் நீர்ப்பாசன நிறுத்தப்பட்டு வயலில் நீர் இழப்பு இடம்பெற அனுமதிக்கப்படும். அறுவடை செய்யப்பட்ட இலைகளை நிழலான உலர்ந்த இதனுடைய இடங்களில் சேகரிக்க வேண்டும் அறுவடை செய்யப்பட்டதை கொங்கிரீட் நிலங்களில் அல்லது கொங்கிரீட் செய்யப்பட்ட தரைகளில் அடுக்கி சேமித்து வைக்கலாம்.

கற்றாழையின் பொருளாதார வாழ்க்கை

கற்றாழையின் வணிக விளைச்சலை நடுகை செய்து இரண்டாவது முதல் ஐந்தாம் வருடம் வரை பெறலாம். அதன்பிறகு, வயலை மீண்டும் நடவு செய்ய வேண்டும்.

கற்றாழையின் விளைச்சல் ஆனது ஒரு ஹெக்டேர் நிலத்தில் இருந்து சராசரியாக 40 முதல் 50 தொன் ஆரோக்கியமான நன்கு சதை பிடிப்பான இலைகளை அறுவடை செய்ய முடியும்.

கற்றாழைக்கான சந்தை வாய்ப்பு

அழகு சாதன பொருட்கள் உற்பத்தி மற்றும் மருந்து பொருட்கள் உற்பத்தி என்பவற்றை மேற்கொள்ளும் உற்பத்தி நிறுவனங்களின் மூலம் அதிகளவு இவை கொள்வனவு செய்யப்படுகின்றன அதுமட்டுமன்றி ஏற்றுமதிக்கும் அதிகளவான கேள்வி சந்தையில் காணப்படுகின்றது.

மருந்து மற்றும் மூலிகை நிறுவனங்கள் மூலம் கொள்வனவு செய்தல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இந்த தாவரங்களுக்கு சர்வதேச சந்தைகளிலும், அதன் மருத்துவ மதிப்பு மற்றும் நறுமணம் காரணமாகவும் சிறந்த தேவை உள்ளது.

அதுமட்டுமன்றி சேதன முறையில் கிராமப் புறங்களிலும் கற்றாழை பானம் கற்றாழை ஷாம்பு கற்றாழை சவர்க்காரம் கற்றாழை மருந்து பொருட்கள் என்பவற்றின் உற்பத்தியும் அதிக அளவில் இடம்பெறுகிறது.

வீட்டுத்தோட்ட பராமரிப்பு

வீட்டுத்தோட்டம் உங்கள் உடலுக்கு மட்டுமன்றி மனதுக்கும் ஆரோக்கியமான பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. வீட்டுக்கு வெளியில் உள்ள முற்றம் அல்லது பின் பகுதியில் அல்லது வீட்டினுள் உள்ள சிறிய பகுதிகளில் என இடவசதிக்கு ஏற்றவாறு வீட்டுத்தோட்டம் அமைக்கலாம். பச்சை பசேலென பசுமை போர்த்திய இலைகள் நிறைந்த தாவரங்களும் அழகிய பல வண்ண நிற பூக்களும், நீங்கள் அமைதியற்று இருக்கும் சந்தர்ப்பங்களில் மன அமைதியினை தரக்கூடியது. அதுமட்டுமன்றி உங்களது ஓய்வான நேரங்களை இயற்கையோடு கழிக்கும் சந்தர்ப்பத்தினையும் வீட்டுத்தோட்டம் ஏற்படுத்தி தருகிறது. வீட்டுத்தோட்டத்தினை பேணி பாதுகாத்து பராமரிக்கும் போது உங்களுள் தானாகவே பொறுப்பும் பொறுமையும் துளிர்விட தொடங்கி விடும். வீட்டுத்தோட்டத்தினை அமைப்பது பற்றிய சில உதவிக் குறிப்புகள் மற்றும் ட்ரிக்ஸ்களை நீங்கள் இப் பதிவில் காணலாம்.

சிறிய, குறைவான அளவு பராமரிப்பு தேவையுடைய தாவரங்களை தெரிவு செய்யுங்கள்



பயிரிடும் தாவரங்களை கொல்லக்கூடாது என்பதே முக்கிய நோக்கம். கற்றாழை, அலோ வேரா, சான்சேவியா (பாம்பு தாவரம்), இசட் இசட் தாவரம், பீஸ் லில்லி மற்றும் போத்தோஸ் (பண தாவரம்) ஆகியவை மிகவும் இலகுவாக வளர்க்கக் கூடியவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கு குறைந்த அளவிலான ஒளி மற்றும் நீர் போதுமானது. ஆகையால் நாம் அதிகளவிலான கவனத்தினை செலுத்தி பராமரிக்க தேவையில்லை. இவை வீட்டுத்தோட்டம் ஒன்றை தொடங்குவதற்கு சிறந்த தொடக்க தாவரங்களாக இருக்கும்.

சமையலறை மூலிகைகள் மற்றும் கீரை, தக்காளி, மிளகாய் போன்ற காய்கறிகளையும் முயற்சி செய்யலாம். ஆனால் ஒரு சில தாவரங்களுடன் தொடங்குவது முக்கியமான ஒன்றாகும். அவ்வாறு தொடங்குவதனால் நீர்ப்பாசன அட்டவணைகள் மற்றும் பராமரிப்பைக் கண்காணிப்பதற்கென பெரிதாக கவனம் செலுத்த வேண்டி இருக்காது.

ஒளி தான் எல்லாமே!

வீட்டுத்தோட்டம் என்று வரும்போது சுற்றுச்சூழல் மிக முக்கியமானது. வீட்டுத்தோட்டத்திற்கான சரியான இடத்தினை ஒளி மற்றும் ஈரப்பதத்தின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து தெரிவு செய்யுங்கள். சூரிய ஒளி தான் உங்கள் வீட்டில் நீங்கள் வளர்க்கவிருக்கும் தாவரக்குழந்தைகள் தமக்கான உணவினை பெற்றுக் கொள்ளும் ஒரே ஓர் வழி. அவ்வாறு சரியானளவு சூரிய ஒளி கிடைப்பதால் அவர்கள் ஆரோக்கியமானஇ நறுமணமுள்ள அழகான குழந்தைகளாக வளர்ந்து செழிப்பார்கள். வீட்டு தாவரங்கள் நிழல் அல்லது மறைமுகமாக கிடைக்க கூடிய சூரிய ஒளியை விரும்புகின்றன. மேலும் பல வகையான கற்றாழை, சதைப்பற்றுள்ள காய்கறிகள் மற்றும் பூச்செடிகள் போன்றன, பால்கனியில் அல்லது முற்றத்தில் கிடைக்கக் கூடிய பிரகாசமான நேரடி சூரிய ஒளியை விரும்புகின்றன. நீங்கள் தத்தெடுக்க விரும்பும் தாவரக்குழந்தைகளை பற்றி நீங்கள் ஏற்கனவே அறிந்திருத்தல் வேண்டும். உங்கள் தாவரத்தின் ஒளித் தேவைகளை அறிய சிறிது ஆராய்ச்சி செய்யுங்கள்.

சரியான தாங்கிகளை தெரிவு செய்தல்

ஒரு தாவர நெர்சரியில் இருந்து தாவரங்கள் அல்லது நாற்றுகளை வாங்குவது வீட்டுத்தோட்டத்தினை தொடங்குவதற்கான எளிதான வழியாக இருக்கலாம். அவை வீட்டிற்கு வந்ததும், அவற்றிற்கான சாடி அல்லது நிலத்திற்கு மாற்றப்பட வேண்டும். பழங்கள் மற்றும் காய்கறிகளின் உலர்ந்த விதைகளையும் நீங்கள் பயிரிடலாம். இது நிலையானது, மலிவானது மற்றும் நம்பமுடியாத அளவிற்கு திருப்தி அளிக்க கூடியது. விதைகளை ஈரமான பருத்தி அல்லது துணியில் வைத்து, அவை முளைக்கும் வரை சூரிய ஒளியில் இருந்து விலக்கி பராமரிக்கவும். அதன் பின்னர் அது ஒரு நாற்றாக வளர ஒரு சாடியில் பயிரிடுங்கள். வேர் வளர்ச்சிக்கு இடமளிக்கும் வகையில் தாவரம் வளர்ந்து வரும் தற்போதைய பானையை விட, 2-4 அங்குல பெரிய கொள்கலனைத் தேர்வு செய்யவும். வேர்

அழுகலைத் தடுக்க எப்போதும் கீழே வடிகால் துளைகளைக் கொண்ட கொள்கலன்களைத் தேர்ந்தெடுங்கள்.

உங்கள் மண்ணை தயார்படுத் துங்கள்

வீட்டுத்தோட்டத்திற்கான மண்ணை பொறுத்த வரை, நீங்கள் ஒரு தாவர நாற்றங்கால் அல்லது கோகோ கரி மற்றும் ஆர்கானிக் உரம் கலந்த தோட்ட மண்ணிலிருந்து ஒரு சாடி மண் எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் மண்ணை அவ்வப்போது தளர்த்தவும்இ காற்றோட்டம் புகக்கூடிய வகையில் பராமரிக்கஇ நேரத்திற்கு நேரம் அவதானித்து சாடியில் தாவரத்தின் வேர்கள் சேதப்படாத வகையில் துளைகள் இடுங்கள். நீங்கள் அவற்றை நேரடியாக தரையில் நடுவதற்கு முடிவு செய்திருந்தால்இ மண்ணைத் தளர்த்திஇ ஆர்கானிக் உரங்களை மண்ணோடு சேர்த்து உங்கள் தாவரத்திற்கான மண்ணை தயார் செய்யவும்.

தேவைப்படும்போது மட்டும் நீர் பாய்ச்சவும்

விரலினைக் கொண்டு மண்ணின் ஈரப்பதத்தினை பரிசோதனை செய்யுங்கள். உங்கள் விரலின் முதல் ரேகை வரை மண்ணுள் இடுங்கள். முதல் அங்குலத்திலிருந்து அல்லது அங்குல அரை வரை மண் வறண்டிருந்தால் தண்ணீர் பாய்ச்சவும். ஈரமான இலைகள் பூஞ்சையை ஏற்படுத்துவதால் இலைகளைத் தவிர்த்துஇ தாவரத்தின் அடிப்பகுதியை நோக்கி நீர்ப்பாய்ச்சவும். இலைகளில் பழுப்பு நிற பகுதிகள் இருக்கின்றனவா என அவதானியுங்கள் ஏனெனில் இது மோசமான நீர்ப்பாசனத்தின் அறிகுறியாகும். மேலும்இ வழக்கமான நீர்ப்பாசன சுழற்சிகளில் அவதானமாக இருக்கவும். காலையில் ஒரு ஸ்பிரிட்ஸருடன் இலைகளை லேசாக ஈரலிப்பாக வைத்திருக்கவும்.

உங்கள் தாவரத்தை பற்றி அறிந்து கொள்ளுங்கள்

நீங்கள் வளர்க்கும் ஒவ்வொரு தாவரத்திற்கும் உயிர் உண்டு. அவற்றினை உறவுகளாக பராமரியுங்கள். உங்கள் தாவரங்களைக் கேளுங்கள். அவர்களைக் கவனித்துப் பேசுங்கள். உங்கள் தாவரத்தின் தன்மை, நீர்ப்பாசனம் மற்றும் உரமிடுதல் அட்டவணைகளின் பதிவைப் பராமரிக்க தவறாதீர்கள். இது உங்கள் தாவரத்தின் தேவைகளை நன்கு புரிந்துகொள்ளவும், மகிழ்ச்சியாக வைத்திருக்கவும் உதவும். உங்கள் தாவரத்தை அன்புடனும் அக்கறையுடனும் அரவணைத்து பராமரியுங்கள். பொறுமையாக இருத்தல் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான உறவுகளை எவ்வாறு வலு செய்கின்றதோ, அதே போல் உங்கள் தாவரங்கள் வளர்வதற்கான நேரம் மற்றும் இடத்தினை அளியுங்கள்.

சிரட்டைக்குள்ளிருந்து பிறந்த வாழ்வாதாரம்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்', 'உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே' எனும் தத்துவங்களை உணர வைக்கும் பாடல் வரிகளை நாம் கேட்டிருக்கின்றோம். பல்தேசியக் கம்பனிகளின் உற்பத்திகளும், ஏற்றுமதி, இறக்குமதிகளுமாக, உலகம் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில் மேற்படி வரிகளுக்குக் கட்டியம் கூறுவது போன்று கிராமங்களில் சிலர் தமது கைத்தொழில் முயற்சிகளை இன்னும் கைவிடாது மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

'தினமும் சமையலுக்குப் பயன்படுத்திவிட்டு வீசி எறியப்படும், அல்லது எரிக்கப்படும் சிரட்டை களைப் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தையே உருட்டிச் செல்லும், ஒருவரை எமது தேடல் கண்டுகொண்டது.

ஆரம்பத்தில் நான் தச்சு வேலை செய்து வந்தேன் பின்னர் எனக்குப் பாரிய நோய் தாக்கியது. அதிலிருந்து தச்சு வேலையை விட்டுவிட்டு. ஆலயங்களுக்குரிய எருது, மூசுகம், மயில், உள்ளிட்ட வாகனங்களை மரங்களில் செதுக்கி பல கோயில்களுக்கு வழங்கி வந்தேன். பின்னர் என்னால் வெளியில் சென்று நடமாடித் திரிவதற்கு எனது உடல்நிலமை இடம்கொடுக்கவில்லை. வீட்டிலிருக்கும் நாம் பிறரிடம் கையேந்தாமல் சிரட்டையில் அகப்பை செய்து விற்றால் என்ன என்ற யோசனை எனக்குள் எழுந்தது. பின்னர் நான் அகப்பைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்தேன். பின்னர் சிரட்டைகளைப் பயன்படுத்தி தேநீர் குவளை, பூச்சாடி, மற்றும் அழகு சாதனைப் பொருட்கள் செய்வது தொடர்பில் நான் ஊடகங்களில் பார்த்து அறிந்தேன். சிரட்டையில் அகப்பை செய்யும் நமக்கு அதனைக் கொண்டு ஏன் நாமும் வேறு பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியாது என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது.

தற்போது நான் தேநீர் குவளை, உப்பு வைக்கும் பாத்திரம், வீடுகளிலும், ஆலயங்களிலும் பாவிக்கும், சந்தணம், குங்கும், விபூதி, வைக்கும் தட்டுக்கள், கறிகள் பரிமாறும் குவளைகள், தண்ணீர் அருந்தும் பாத்திரம், பூச்சாடி, மயில், குருவி, கொக்கு, ஐஸ்கிறீம் கப், கைகளைக் தொற்று நீக்கும் திரவங்ளைப் பாவிக்கும் பாத்திரம், கீடெக், அகப்பைகள், உள்ளிட் பல பாவனைப் பொருட்களும். ஆலங்காரப் பொருட்களுமாக நானும் எனது மனைவியும் சேர்ந்து உற்பத்திகளை மேற்கொண்டு வருன்றோம். 2007 ஆம் ஆண்டிலிருந்து நாம் இதனை மேற்கொண்டு வருகின்றோம். எனினும் இவைகளை உற்பத்தி செய்வதென்பது மிகவும் கடினமானதாகும். மிகவும் நுனுக்கங்களும், மிகுந்த பொறுமையும்

அவதானமும், தேவை. ஆனாலும் நாம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உள்ளூரில் கேள்வி என்பது மிக மிக குறைவாகவே உள்ளன. விற்பனை செய்வதென்பகு மிகவும் கடடிமாகவே உள்ளது. நாம் உற்பத்தி செய்யும் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் நியாய விலைக்கு விற்பனை செய்யலாம் எனவும், அதிலிருந்து நாம் ஓரளவு எதிர்பார்க்கும் இலாபம் ஈட்டலாம் எனவும் பலரும் தெரிவிக்கின்றனர். ஆனால் அது இதுவரைக்கும் எமக்கு கைகூடி வரவில்லை.

இதுவரைக்கும் எமது இத்தொழிலுக்கு யாரும் உவமுன்வரைவில்லை. ஆனால் தொழில்களுக்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதக்கு ஒருலெட்சரூபாய் கடன் பிரதேச செயலகத்தினூடாக பெற்றுத்தருவதாக கூறியுள்ளார்கள். அது கிடைக்கும் பட்சத்தில் பொருட்களை கொள்வனது செய்துவிட்டு பின்னர் கிடைக்கும் வருமானத்தில் மாதாந்தம் அதனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

ஆனாலும் நான் இத்தொழிலை மேலும் மேம்படுத்த வேண்டும் என சிந்திக்கின்றேன். அதற்கு சில தடைகளும் உள்ளன. நிலையான துளையிடும் மெசின், வெட்டுவதற்குரிய மெசின்,

கடைச்சல் மெசின், உள்ளிட்ட பல சிறியி சிறிய மெசின்கள், தேவையாகவுள்ளது. புதியவர்களை இத்தொழிலைப் பழக்கி எடுப்பதற்குரிய கொட்டகை வசதியும் எம்மிடம் போதாதுள்ளது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வசிப்பவர்கள் அதிகம்பேர் உள்ளார்கள். அவ்வாறானவர்கள் நாம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அவர்கள் வாழும் நாடுகளில் அதிக சந்தைவாய்ப்பு உள்ளதாக அறிகின்றோம். எனவே எமது உற்பத்திகளை அவ்வாறானவர்கள்

கொள்வனவு செய்தாலும், அல்லது ஏற்றுமதி செய்தாலும், நாம் இங்கு 300 ரூபாவுக்கு விற்பனை செய்யும் பொருளை 600 ரூபாவுக்கு வெளிநாடுகளிலுள்ளோருக்கு விற்றால் எமது வாழ்வாதாரமும் மேம்படும். ஆனாலும் எமக்கு அவ்வாறானவர்களின் தொடர்புகள் எமக்குக் கிடையாது.

தற்போதுள்ள இளைஞர்கள் பிறரிடம கையேந்தி கூலி வேலைக்குப் போகின்றார்கள், யுவதிகள் வீட்டிலுள்ளார்கள். நாம் இத்தொழிலை பழக்கி விடுகின்றோம் வாருங்கள் என அழைத்தாலும் வருகின்றார்கள் இல்லை.

எனது தொழிலுக் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலகம் மற்றும் அதனோடிணைந்த சிறுகைத்தொழில் உத்தியோகஸ்த்தர்கள் எனக்கு வேண்டிய ஆலோசனைகளையும், வழக்கி வருகின்றார்கள் எனத் தெரிவிக்கின்றார். மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் பாலையடிவட்டைக் கிராமத்திலுள்ள அந்தோணிப்பிள்ளை சுலோஜன்.

எனினும் சிரட்டையை மூலப்பொருளாக் கொண்டு தொழில் முயற்சிகளை மேற்கொள் பவர்களுக்கு தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகளை மேற்கொள்வதற்குரிய திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளோம்.

இவ்வாறு ஒரேதொழில்களை மேற்கொள் பவர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து ஒரேஅமைப்பாக உருவாக்கி அவர்களின் வாழ்hதாரத்தை மேம்படுத்துவதற்காக இயந்திர வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சிரட்டைய மூலப் பொருளாகக் கொண்டு சுமார் 15இற்கு மேற்பட்டவர்கள் தொழில் முனைபவர்களாக பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் சிரட்டையிலிருந்து உற்பத்தி செய்யும் மூலப்பொருட்களை வடிவமைத்தல் தொடர்பான பயிற்சி நெறி ஒன்றும் அடுத்த மாதம் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் வலது குறைந்தோரையும் நாம் உள்வாங்கியுள்ளோம் வெல்லாவெளியில் இவர்களுக்கான உற்பத்தி நிலையம் ஒன்றை ஒருவாக்குவதற்குரிய யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் இவர்களின் உற்பத்திகளுக்கு உள்ளூரில் சந்தைவாய்ப்புக்கள் குறiவாகவே உள்ளன எனினும் மட்டக்களப்பு மற்றும் கல்முனை, போன்ற ஒருசில இடங்களில் இந்த உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு வாழ்வாதாரத் தொழிலை முன்கொண்டு செல்பவர்களுக்கு சமூர்த்தி திட்டத்தினூடாக இலகு கடன்வசதிளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக போரதீவுப் பற்றுப் பிரதேச செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்கள் உலகெங்கும், பரந்து சென்று வாழ்ந்தாலும், அவர்கள் தாங்கள் பிறந்த வளர்ந்த கிராமங்களை ஒருகணம் சிந்திக்கத் தவறாமல் அவர்களால் முடிந்த உதவிகளையும் மேற்கொண்டு வருவதையும் அவதானிக்க முடிகின்து. அதுபோல் சுலோஜன் போன்றோர் தமது நோய் நிலமையையும் கருத்திற் கொள்ளாது பிறரிடம் யையேந்தாமல் சுயதொழிலை மேற்கொண்டு வரும் நிலையில் அவ்வாறானவர்களுக்கு உந்துசக்தியளிக்க வேண்டியது அனைவரினதும் தலையாக கடமையாகும். அனைவரும் வீசி எறியும் சிரட்டைகளைப் பயன்படுத்தி கலை நுட்பமாக அதனுடான வாழ்வாதாரத்தை மேற்கொண்டு செல்லும் இவ்வாறானவர்களின் உற்பத்திகளை வெளிநாடுகளுக்க ஏற்றுமதி செய்யவும், உள்நாட்டில் தகுந்த சந்தைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவும், அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், மற்றும் பயிற்சிகளையும் பெற்றுக்கொடுக்க தன்னார்வ அமைப்புக்களும் அரசாங்களும், முன்னிற்றவேண்டும் என்பதோடு, புலம்பெயர் தமிழ் மக்களும், இவர்களின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய முன்வரும் பட்சத்தில் இன்னும் பல தொழில் முயற்சியாயர்கள் உருவாகி, வறுமையை விரட்டலாம் என்பதுவே அவைரினதும் எதிர்பார்ப்பாகும்.

வ.சக்திவேல்
சமூக ஆய்வாளர்

நமது நிதி அறிவை மேம்படுத்துவது எப்படி?

- தொழில்முனைவோர்களுக்கு வழிகாட்டும் தமிழர் பொருண்மியம்

தனிநபர் நிதி மேலாண்மை என்றால் என்ன?

தனிநபர் நிதி மேலாண்மை என்பது ஒரு தனிநபரின் அல்லது குடும்பத்தின் நிதி ஆதாரங்கள் மற்றும் பொறுப்புகள் ஆகும். அவற்றுள் பட்ஜெட், சேமிப்பு, முதலீடு மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல், சம்பாதித்தல், செலவு செய்தல், கடன் வாங்குதல், முதலீடு செய்தல் போன்ற பல்வேறு நிதி நடவடிக்கைகள் அடங்கும்.

தனிநபர்கள் தங்கள் குறுகிய கால மற்றும் நீண்ட கால நிதி இலக்குகளை அடைவதற்கு, தங்கள் பணத்தை எவ்வாறு சிறப்பாக நிர்வகிப்பது என்பது பற்றிய தகவலறிந்து முடிவுகளை எடுக்க உதவுவதே தனிநபர் நிதி மேலாண்மையின் குறிக்கோள் ஆகும்.

தனிநபர் நிதி மேலாண்மை பல காரணங் களுக்காக முக்கியமானது, அவற்றுள்:

நிதி நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பை அடைதல்: தனிநபர்கள் தங்கள் பணத்தைப்பற்றி தகவலறிந்து முடிவுகளை எடுக்க தனிநபர் நிதி மேலாண்மை உதவுகிறது, இது அதிக நிதி நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு வழிவகுக்கும்.

எதிர்பாராத நிகழ்வுகளுக்குத் தயாராகுதல்: வேலை இழப்பு அல்லது மருத்துவ அவசரம் போன்ற எதிர்பாராத நிகழ்வுகள் ஒரு நபரின் நிதித் திட்டங்களை சீர்குலைக்கும். தனிநபர்கள் அவசரகால நிதியைக் கட்டியெழுப்புவதன் மூலமும் அவர்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதன் மூலமும் இத்தகைய நிகழ்வுகளுக்குத் தயாராவதற்கு தனிநபர் நிதி மேலாண்மை உதவியாக இருக்கும்.

நிதி இலக்குகளை பூர்த்தி செய்தல்: தனிநபர்கள் தங்கள் நிதி இலக்குகளை அடைய தனிநபர் நிதி மேலாண்மை உதவுகிறது, அதாவது வீடு வாங்குவது, ஓய்வு பெறுவதற்குச் சேமிப்பது அல்லது அவர்களின் குழந்தைகளின் கல்விக்கு பணம் செலுத்துவது.

மன அழுத்தத்தைக் குறைத்தல்: நல்ல விதமான தனிப்பட்ட நிதி நடைமுறைகள்

தனிநபர்களுக்கு அவர்களின் நிதி நிலைமையைப் பற்றிய தெளிவான புரிதலை தரும்.

மற்றும் அவர்களின் பணத்தை நிர்வகிப்பதற்கான திட்டத்தை வழங்குவதன் மூலம் நிதி அழுத்தத்தைக் குறைக்கும். செல்வத்தை கட்டியெழுப்புதல்: தனிநபர்கள் தங்கள் சொத்துக்களை சேமிப்பது, முதலீடு செய்வது மற்றும் பாதுகாப்பது பற்றி தெரிந்துகொண்டு முடிவுகளை எடுப்பதன் மூலம், தனிநபர்கள் தங்கள் செல்வத்தை காலப்போக்கில் வளர்த்துக்கொள்ள உதவும்.

சுருக்கமாக, தனிநபர்கள் நிதி நிலைத்தன்மை, பாதுகாப்பு மற்றும் செழிப்பு ஆகியவற்றை அடைய உதவுவதில் தனிநபர் நிதி மேலாண்மை முக்கிய பங்குவகிக்கிறது.

தனிநபர் நிதி மேலாண்மையின் கூறுகள் என்ன?

வரவு செலவுத் திட்டம்: ஒருவரின் நிதி இலக்குகளுடன் ஒத்துப்போகும் செலவுத் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் அந்த செலவுத்திட்டத்தை ஒட்டி தங்கள் வாழ்க்கையை நடத்துதல்.

சேமிப்பு மற்றும் முதலீடு: குறுகிய மற்றும் நீண்ட கால இலக்குகளுக்காக பணத்தை ஒதுக்கி வைப்பது, அதே போல் காலப்போக்கில் செல்வத்தை பெருக்க முதலீடு செய்வது.

கடனை நிர்வகித்தல்: கடன் அட்டை மூலம் கடன், மாணவர் கடன்கள் அல்லது அடமானம் போன்ற கடனைப் புரிந்துகொண்டு திறம்பட நிர்வகித்தல்.

காப்பீடு: ஆயுள் காப்பீடு, உடல்நலக் காப்பீடு மற்றும் சொத்துக் காப்பீடு போன்ற காப்பீட்டுக் கொள்கைகள் மூலம் நிதி இழப்பிலிருந்து தன்னையும் ஒருவரின் சொத்துக்களையும் பாதுகாத்தல்.

ஓய்வூதியத் திட்டமிடல்: ஓய்வூதிய சேமிப்புக் கணக்குகளுக்கான பங்களிப்புகள் மற்றும் ஓய்வூதிய வருமான உத்தியை உருவாக்குதல் போன்றவை இதில் அடங்கும்.

வரி திட்டமிடல்: ஒருவரின் வரிப் பொறுப்பைப் புரிந்துகொண்டு அதை திறம்பட நிர்வகித்தல். வரிப் பலன்களை அதிகப்படுத்துதல் மற்றும் வரிப் பொறுப்பைக் குறைத்தல் போன்றவை. நமது நிதி அறிவை மேம்படுத்துவது எப்படி?

புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளைப் படித்தல்: இன்று எண்ணற்ற புத்தகங்களும், கட்டுரைகளும் இணையத்தளத்தில் குவிந்து கிடக்கிறது அவை தனிநபர் நிதி மேலாண்மை பற்றி நாம் அறிந்து கொள்ள உதவுகிறது.

தகவலறிந்தபடி இருத்தல்: நடப்பு நிகழ்வுகள் மற்றும் நிதி உலகில் ஏற்படும் மாற்றங்களைத் தொடர்ந்து தெரிந்துகொள்வது, பிறருடன் தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கும் நிதி சார்ந்த சிறந்த முடிவுகளை எடுப்பதற்கும் உதவும்

பட்ஜெட்டை உருவாக்குதல்: பட்ஜெட்டை உருவாக்குதல் மற்றும் அதன்படி நடத்தல் என்பது பணத்தை நிர்வகிப்பதில் மற்றும் நிதி முடிவுகளை எடுப்பதில் அனுபவத்தைப் பெறுவதற்கான ஒரு நடைமுறை வழியாகும். நல்ல பழக்கவழக்கங்களைப் பயிற்சி செய்தல்: ஒருவருடைய வழிமுறைகளுக்குள் வாழ்வது, தேவையற்ற கடனைத் தவிர்ப்பது மற்றும் தவறாமல் சேமிப்பது போன்ற நல்ல நிதிப் பழக்கங்களை நடைமுறைப்படுத்துவது, தனிநபர்கள் தங்கள் நிதி எதிர்காலத்திற்கான உறுதியான அடித்தளத்தை உருவாக்க உதவும்.

இந்த முறைகளை ஒருவரின் தனிப்பட்ட நிதிக் கல்வியில் இணைப்பதன் மூலம், தனிநபர்கள் தனிநபர் நிதி மேலாண்மை பற்றிய விரிவான புரிதலைப் பெறலாம்.

இலங்கையின் OPR முடிவு: பொருளாதார தாக்கங்கள் மற்றும் துறைசார் தாக்கம்

இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நாணயக் கொள்கை வாரியம், தொடர்ச்சியான இரண்டாவது கூட்டத்திற்கும், இரவு நேர கொள்கை விகி தத்தை (vernight Policy Rate - OPR) 8.00% இல் பராமரிக்க முடிவு செய்துள்ளது. உள்நாட்டுப் பொருளாதாரம் எச்சரிக்கையுடன் மீண்டு வருவதற்கும், வாய்ப்புகள் மற்றும் அபாயங்கள் இரண்டையும் வழங்கும் உலகளாவிய பொருளாதார சூழலுக்கும் மத்தியில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்ளும் அதேவேளையில், பணவீக்க இலக்கை 5% ஆக அடைவதுதான் முதன்மையான நோக்கமாகும்.

ஒற்றைக் கொள்கை வட்டி விகித பொறிமுறைக்கு மாற்றத்தின் ஒரு பகுதியாக, நவம்பர் 27, 2024 அன்று இலங்கை மத்திய வங்கியால் (CBSL) ஓவர்நைட் பாலிசி விகிதம் (OPR) அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பு, CBSL நிலையான வைப்பு வசதி விகிதம் (Standing Deposit Facility Rate - SDFR) மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் (Standing Lending Facility Rate - SLFR) ஆகியவற்றை உள்ளடக்கிய இரட்டைக் கொள்கை விகித அமைப்பின் கீழ் செயல்பட்டது.

கடந்த கால கொள்கை விகிதங்கள்:

- மார்ச் 2023: பொருளாதார சவால்களுக்கு பதிலளிக்கும் விதமாக, CBSL கொள்கை விகிதங்களை கணிசமாக உயர்த்தியது, SDFR 15.50% ஐ எட்டியது, இது இந்த காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த அளவைக் குறிக்கின்றது.

- ஜூலை 2020: உலகளாவிய மந்த நிலைகளுக்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்காக, CBSL SDFR ஐ 4.50% ஆகக் குறைத்தது, இது கவனிக்கப்பட்ட காலக்கெடுவில் மிகக் குறைந்த விகிதத்தைக் குறிக்கின்றது.

- நவம்பர் 2023: பொருளாதார மீட்சியை ஆதரிக்க, CBSL SDFR மற்றும் SLFR ஐ முறையே 9.00% மற்றும் 10.00% ஆக 100 அடிப்படை புள்ளிகளால் குறைத்தது.

- செப்டம்பர் 2024: CBSL பொருளாதார நிலைமைகளை மதிப்பிட்டபோது, SDFR மற்றும் SLFR முறையே 8.25% மற்றும் 9.25% ஆக பராமரிக்கப்பட்டன.

- நவம்பர் 27, 2024: பணவியல் கொள்கை செயல்படுத்தலை எளி தாக்க இரட்டை விகித முறையை மாற்றியமைத்து, CBSL 8.00% இல் ஓவர்நைட் பாலிசி விகிதத்தை (OPR) அறிமுகப்படுத்தியது.

- ஜனவரி 29, 2025: தொடர்ச்சியான பொருளாதார மீட்பு முயற்சிகளை ஆதரிப் பதற்காக OPR 8.00% இல் நிலையாக



வைக்கப்பட்டது.` ஒற்றைக் கொள்கை விகிதத்திற்கான இந்த மாற்றம், இலங்கையின் நிதிச் சந்தைகளுக்குள் பணவியல் கொள்கை சமிக்ஞை மற்றும் பரிமாற்றத்தின் செயல்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

விகிதங்களை மாற்றாமல் வைத்திருப்பதற்கான முடிவு பல காரணிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது, அவற்றுள்:

- மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைகள் குறைப்பால் உந்தப்பட்டு தொடர்ந்து காணப்படுகின்ற எதிர்மறை பணவீக்கம்.

- உள்நாட்டு குறிகாட்டிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் வலுவான பொருளாதார மீட்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

- சந்தை வட்டி விகிதங்கள் குறைந்து வருவதால், கடன் ஓட்டம் அதிகரிக்கின்றது.

- அதிக ஏற்றுமதிகள் ஆனால் விரிவடையும் வர்த்தக பற்றாக்குறையுடன் கூடிய கலப்பு வெளிப்புறத் துறை.

நேர்மறையான பொருளாதார தாக்கங்கள்

1. பொருளாதார வளர்ச்சிக்கான ஆதரவு

- ஒரு நிலையான OPR குறைந்த கடன் விகிதங்களை ஊக்குவிக்கின்றது, இதனால் வணிகங்கள் மற்றும் தனிநபர்கள் மலிவான கடனை அணுகமுடியும்.

- வலுவான தனியார் துறை கடன் ஓட்டங்கள் வணிக விரிவாக்கம், மூலதன முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை எளிதாக்கும்.

2. முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் சந்தை நிலைத்தன்மை

- பணவியல் கொள்கையில் முன்னறிவிப்பு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உறுதியளிக்கின்றது.

- CBSL இன் வெளிநாட்டு கொள்முதல்கள் மற்றும் IMF-EFF திட்டம் காரணமாக அந்நிய செலாவணி இருப்புக்கள் நிலையானதாக உள்ளன, இது நாட்டின் வெளிப்புற நிலையை மேம்படுத்துகின்றது.

3. நிலையான நுகர்வு மற்றும் முதலீடு

- 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பணவீக்கம் நேர்மறையாக மாறும் என எதிர்பார்க்கப்படுவதால், தேவை சார்ந்த வளர்ச்சி மேம்படும், இது நுகர்வோர் செலவினங்களை நம்பியிருக்கும் தொழில்களுக்கு பயனளிக்கும்.

4. அரசாங்கத்திற்கு குறைந்த கடன் செலவுகள்

- அரசாங்கம், ஒரு பெரிய கடன் வாங்குபவராக இருப்பதால், நிலையான கொள்கை விகிதங்களிலிருந்து பயனடைகின்றது, நடுத்தர காலத்தில் நிதி அழுத்தத்தைக் குறைக்கின்றது.

எதிர்மறை பொருளாதார தாக்கங்கள்

1. விரிவடையும் வர்த்தக பற்றாக்குறை

- ஏற்றுமதிகள் வலுவாக இருந்தாலும், பொருளாதார மீட்சி காரணமாக அதிகரித்த



இறக்குமதிகள் வர்த்தக பற்றாக்குறையை மோசமாக்கி, ரூபாயின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும்.

2. எதிர்கால பணவீக்க அழுத்தத்திற்கான சாத்தியக்கூறு

- கடன் விரிவாக்கம் வலுவடைந்து தேவை அதிகரிக்கும் போது, பணவீக்கம் எதிர்பார்த்ததை விட வேகமாக அதிகரிக்கக்கூடும், பின்னர் கடுமையான பணவியல் நடவடிக்கைகள் தேவைப்படும்.

3. போராடும் (கஷ்டப்படுகின்ற) துறைகளுக்கு வரையறுக்கப்பட்ட உடனடி நிவாரணம்

- கட்டுமானம் போன்ற மீட்சிக்கு அதிக தீவிரமான வட்டி விகிதக் குறைப்பு தேவைப்படும் சில துறைகள் தொடர்ந்து அதிக மூலதனச் செலவுகளைச் சந்திக்க நேரிடும். ஓவர்நைட் பாலிசி ரேட்டை (OPR) 8.00% இல் பராமரிப்பதன் சாத்தியமான எதிர்மறை பொருளாதார தாக்கங்களைக் குறைக்க, கொள்கை வகுப்பாளர்கள் பின்வரும் நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளலாம்:

1. வெளித்துறை மீள்தன்மையை வலுப்படுத்துதல்

- ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்துதல்: வரிச் சலுகைகள், சலுகை நிதியுதவி மற்றும் குறைக்கப்பட்ட இணக்கச் சுமைகள் போன்ற சலுகைகளுடன் ஏற்றுமதி சார்ந்த தொழில்களை ஆதரித்தல்.
- இறக்குமதி மாற்றுக் கொள்கைகள்: இறக்குமதி சார்புநிலையைக் குறைக்கவும் வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைக்கவும் அத்தியாவசியப் பொருட்களின் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கவும்.
- மாற்று விகிதத்தை நிலைப்படுத்துதல்: ரூபாய் மதிப்பு தொடர்ந்து சரிந்தால், போட்டித்தன்மை வாய்ந்த ஏற்றுமதி நிலையைப் பராமரிக்கும் அதேவேளையில், அதிகப்படியான ஏற்ற இறக்கத்தைத் தடுக்க CBSL எச்சரிக்கையுடன் தலையிட வேண்டியிருக்கும்.

2. பணவீக்க அபாயங்களை நிர்வகித்தல்

- இலக்கு மானியக் குறைப்புக்கள்: திடீர் பணவீக்க அதிர்ச்சிகளைக் குறைக்கும் வகையில் மின்சாரம் மற்றும் எரிபொருள் மீதான மானியங்களைப் படிப்படியாகக் குறைத்தல்.

- விலை கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகள்: திறமையான விநியோகச் சங்கிலி மேலாண்மை மற்றும் பணவீக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் மலிவு விலையில் இருப்பதை உறுதி செய்தல்.

3. **கடன் வளர்ச்சி மற்றும் SME துறையை ஆதரித்தல்**

- இலக்கு கடன் திட்டங்கள்: அதிக கடன் செலவுகளுடன் போராடும் SME களுக்கு அரசாங்க ஆதரவுடன் கூடிய கடன் உத்தரவாதத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- வாராக் கடன்களைக் குறைத்தல் (NPLs): நெருக்கடியான சொத்துக்களை நிர்வகிக்கவும் கடன் வழங்குவதை ஊக்குவிக்கவும் வங்கித் துறை

வழிமுறைகளை வலுப்படுத்துதல்.

- சிறப்புத் துறை கடன் விகிதங்கள்: முதலீட்டைத் தக்கவைக்க விவசாயம், கட்டுமானம் மற்றும் உற்பத்தி போன்ற தொழில்களுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட விகிதக் குறைப்புகளைக் கருத்தில் கொள்ளுதல்.

4. நிதிக் கொள்கை சரிசெய்தல்

- முற்போக்கான வரிவிதிப்பு சரிசெய்தல்கள்: நடுத்தர வருமானக் குழுக்கள் மற்றும் வணிகங்கள் மீதான சுமைகளைக் குறைக்க பெருநிறுவன மற்றும் தனிநபர் வரி கட்டமைப்புகளை மதிப்பாய்வு செய்யதல்.
- முதலீட்டிற்கான சலுகைகள்: புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உற்பத்தி மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் போன்ற முன்னுரிமைத் துறைகளில் நீண்டகால முதலீட்டாளர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குதல்.
- அதிக வரி இல்லாமல் அரசாங்க வருவாயை மேம்படுத்துதல்: VAT மற்றும் SSCL விகிதங்களை திடீரென அதிகரிப்பதற்குப் பதிலாக வரி இணக்கத்தை மேம்படுத்தி வரி தளத்தை விரிவுபடுத்துதல்.

5. **பணவியல் கொள்கை ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்**

- தரவு சார்ந்த கொள்கை சரிசெய்தல்கள்: வளர்ச்சி குறைந்தாலோ அல்லது பணவீக்கம் எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் குறைந்தாலோ, CBSL நெகிழ்வானதாக இருக்க வேண்டும், விகிதங்களைக் குறைக்கத் தயாராக இருக்க வேண்டும்.
- நிலைத்தன்மைக்கான முன்னோக்கிய வழி காட்டுதல்: வணிகம் மற்றும் முதலீட்டு முடிவுகளில் நிச்சயமற்ற தன்மையைக் குறைக்க எதிர்கால பணவியல் கொள்கை திசைகள் குறித்து தெளிவான தகவல் தொடர்புகளை வழங்குதல். இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலையான வளர்ச்சியுடன் சமநிலைப்படுத்த முடியும், அதே நேரத்தில் OPR ஐ 8.00% இல் பராமரிப்பதில் உள்ள அபாயங்களைக் குறைக்கமுடியும்.

இந்த முடிவால் பயனடையும் தொழில்கள் மற்றும் வணிகங்கள்

1. **வங்கி மற்றும் நிதி சேவைகள்**

- நிலையான விகிதங்கள் வங்கிகள் அதிகரித்த கடன் தேவையிலிருந்து பயனடையும் அதே வேளையில் கடன் பரவல்களைப் பராமரிக்க அனுமதிக்கின்றன. வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFIs) மேம்பட்ட கடன் விநியோகங்களைக் காணலாம்.

2. **சில்லறை விற்பனை மற்றும் நுகர்வோர் பொருட்கள்**

- குறைந்த கடன் செலவுகள் அதிக நுகர்வோர் செலவினங்களை ஊக்குவிக்கின்றன, இது சில்லறை விற்பனையாளர்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் FMCG நிறுவனங்களுக்கு பயனளிக்கின்றது.

3. **சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்**

- சுற்றுலா வருவாய் மேம்படுவதால், நிலையான வட்டி விகித சூழல் இந்தத் துறையில் முதலீட்டை ஆதரிக்கின்றது.

4. **ஏற்றுமதி சார்ந்த தொழில்கள்**

- ரூபாய் மதிப்பு ஓரளவு சரிவைக் கண்டாலும், ஏற்றுமதி வணிகங்கள் போட்டித்தன்மை வாய்ந்த மாற்று விகிதத்தால் பயனடைகின்றன.

இந்த முடிவால் பாதிக்கப்பட்ட தொழில்கள் மற்றும் வணிகங்கள்

1. **இறக்குமதி சார்ந்த வணிகங்கள்**

- இறக்குமதி அதிகரிப்பால் வர்த்தக பற்றாக்குறை அதிகரித்து, ரூபாய் மதிப்பு

வீழ்ச்சியடையும் அபாயம் உள்ளது. இதனால் இறக்குமதியாளர்களுக்கு செலவுகள் அதிகரிக்கும்.

2. கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட்

- இந்தத் துறைகள் அதிக நிதிச் செலவுகள், புதிய திட்டங்கள் மற்றும் முதலீட்டு ஓட்டங்களைத் தாமதப்படுத்துதல் ஆகியவற்றால் போராடக் கூடும்.

3. அதிக கடன் சுமைகளைக் கொண்ட SMEகள்

- கடன் விகிதங்கள் குறைந்து வரும் அதே வேளையில், பல SME-களுக்கு அவை அதிகமாகவே உள்ளன, இதனால் அவற்றின் விரிவாக்கத் திறன் கட்டுப்படுத்தப்படுகின்றது.

பெருநிறுவன மற்றும் தனிநபர் வரி செலுத்துவோர் மீதான தாக்கம் நிறுவன வரி செலுத்துவோர்:

- குறைந்த வட்டி செலவுகள்: குறிப்பிடத்தக்க கடன்களைக் கொண்ட நிறுவனங்கள் வட்டி செலவுகளைக் குறைத்து, நிகர லாபத்தையும் வரி பொறுப்புகளையும் மேம்படுத்தலாம்.
- VAT மற்றும் SSCL தாக்கங்கள்: தனியார் துறை செயல்பாடு அதிகரிப்பதால் அரசாங்கத்திற்கான VAT மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) வசூல் அதிகரிக்கக்கூடும்.
- ஏற்றுமதியாளர்கள் ஆதாயம், இறக்குமதியாளர்கள் அதிக செலவுகளை எதிர்கொள்கின்றனர்: ஏற்றுமதி நிறுவனங்கள் சிறந்த இலாப வரம்புகளைக் காணலாம், அதே நேரத்தில் இறக்குமதியைச் சார்ந்த வணிகங்கள் நாணய மதிப்பு குறைப்பு காரணமாக அதிகரித்த வரிச் சுமைகளை சந்திக்க நேரிடும்.

தனிப்பட்ட வரி செலுத்துவோர்:

- நிலையான கடன் திருப்பிச் செலுத்துதல்: ஏற்கனவே கடன் வைத்திருப்பவர்கள் நிலையான விகிதங்களிலிருந்து பயனடைவார்கள், EMI-களில் திடீர் அதிகரிப்புகளைத் தடுக்கலாம்.
- பணவீக்க பரிசீலனைகள்: பணவீக்கம் நேர்மறையாக மாறும்போது, வாங்கும் திறன் பாதிக்கப்படலாம், இது தனிநபர் சேமிப்பு மற்றும் வரி பொறுப்புகளை பாதிக்கலாம்.
- மறைமுக வரி விளைவுகள்: பொருளாதார மீட்சி தேவையை வலுப்படுத்தினால், VAT மற்றும் SSCL போன்ற மறைமுக வரிகள் உயரக்கூடும், இது மறைமுகமாக நுகர்வோரை பாதிக்கும்.

OPR-ஐ 8.00% ஆகப் பராமரிக்கும் முடிவு, பொருளாதார மீட்சியை ஆதரிப்பதற்கும் பணவீக்க அபாயங்களை நிர்வகிப்பதற்கும் இடையிலான சமநிலையை ஏற்படுத்துகின்றது. வங்கி, நுகர்வோர் மற்றும் ஏற்றுமதித் துறைகள் பயனடையவுள்ளன என்றாலும், இறக்குமதி சார்ந்த தொழில்கள் மற்றும் அதிக கடன் சுமைகளைக் கொண்ட SME-கள் சவால்களை எதிர்கொள்ளக்கூடும் கார்ப்பரேட் வரி செலுத்துவோர் கடன் வாங்கும் செலவுகளில் நிவாரணம் பெறலாம், ஆனால் பொருளாதாரம் விரிவடையும் போது மறைமுக வரி பொறுப்புகள் அதிகரிக்கக்கூடும். தனிநபர் வரி செலுத்துவோருக்கு, நிலையான விகித சூழல் கடன் திருப்பிச் செலுத்துதலில் கணிக்கக்கூடிய தன்மையை உறுதி செய்கிறது, ஆனால் பணவீக்கப் போக்குகள் உண்மையான வருமான விளைவுகளைத் தீர்மானிப்பதில் முக்கியமானதாக இருக்கும்.

CBSL இன் அடுத்த நடவடிக்கைகள் உலகளாவிய அபாயங்கள், பணவீக்க போக்குகள் மற்றும் நிதிக் கொள்கைகளைப் பொறுத்தது, இதனால் வணிகங்களும் கொள்கை வகுப்பாளர்களும் விழிப்புடன் இருந்து அதற்கேற்ப மாற்றியமைப்பது அவசியம்.

ஸ்ரீ AGS. சுவாமிநாதன் சர்மா
MBA (UK), FCA (SL), FCMA (UK),
FCPA (Aust.)

பார்வை

'வாசச்சவுக்காரம்'

முதல்முதலாக எனக்கு நினைவு தெரிந்து காலம் ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு என நினைவிருக்கிறது. வீடுகளில் பெரும்பாலும் சவர்க்காரம் வாங்கு வதில்லை. மாதம் ஒரு சன்லைட். ஆம், அப்போதும் சன்லைட் இருந்தது. என் தந்தை வாங்குவார். அது அவருடைய எட்டுமுழ வேட்டி யையும் சால்வையையும் துவைக்க மட்டும். அதில் துவைத்து நீலம் போடுவது கிடையாது அம்மா அதை துகில் வெள்ளை என்பார் அவ்வளவு பளிச்சென்று துவைப்பார்.

அப்பா தோட்டத்தில் வேலை செய் யும்போது கோவணம்தான் அணிவார் அந்த வேலை முடிய, மேல்கழுவிவிட்டு ஒரு சாரம் கட்டுவார். என்ன அவருக்கு அப்போது

இருபத்திரண்டு வயதுதான். கடைத்தெருவுக்கு போகும் போது வேட்டி கட்டி மேலே சால்வையை மடித்துப் போட்டுக்கொண்டு போவார் சேட் அணிவது இல்லை. பொதுவாக எல்லா ஆண்களுக்கும் இதுதான் பொதுவான ஆடைவடிவம். ஏனையவர்களின் உடுப்புகளை குளத்தில் குளிக்கும்போது துவைத்துப் போட்டு ஒரு காக்கட்டி சவர்க்காரம் கிடைக்கும். திபாவளி புதுவருசம், கலியாண வீடு போன்ற விசேட தினங்களில்மட்டும் குளிப்பதற்கு வாசச் சவுக்காரம் வாங்குவார்கள். அது 'குட்டிகுரா' அல்லது 'ராணிசந்தனசோப்' ஐம்பதுகளின் நடுப்பகுதியில் ரெக்சோனா, லக்ஸ், இரண்டும,; லைபோய் சோப்பும் வந்துவிட்டது.

இந்த சவர்க்காரங்களை தாம் பயன்படுத்தியே இவ்வளவு அழகாக இருப்பதாக போர்த்து முடியபடியே ஒரு 'போஸ்' கொடுப்பார் அஞ்சலிதேவி, அதே போல யமுனா லக்ஸ் சோப் விளம்பரத்திலும் வருவார். ஏல்லாம் கல்கி கலைமகள் போன்ற புத்தகங்களில்தான் வேறு விளம்பர சாதனங்கள் கிடையாது. வானொலி ஊருக்கு ஒன்றிரண்டு இருந்தாலும் அதில் தமிழ் நிகழ்ச்சிகள் அதுவும் வர்த்தக சேவை காலை பத்துமுதல் பதினொரு மணிவரைதான். ஐம்பதுகளின் இறுதியில் மாலை வர்த்தக சேவை மூன்று மணிமுதல் ஆறுமணிவரை நீடிக்கப்பட்டது. இப்போதுதான் வர்த்தக உலகின் விளம்பர உத்திகளை நாம் அறிந்தோம் எழுபதுகளில்தான் தொலைக்காட்சிப்பெட்டி வரத் தொடங்கியது. நகரத்தை அண்டியே மின்சாரம் இருந்தது எனவே தொலைக்காட்சி நகரத்தைவிட்டு நகரவில்லை. நகரசபை மைதானத்தில் மாலையில் ஒரு தொலைக்காட்சிப்பெட்டி வேலை செய்யும். அதில் பாடல்கள் முக்கிய நிகழ்ச்சிகள் கிரிக்கட் போட்டிகள் செய்திகள் என்பன காண்பிக்கப்பட்டது. நகரத்தது மக்கள் அங்கே கூடி நிகழ்ச்சிகளைப் பார்த்தார்கள்.

வீடுகளில் சோப்பிற்குப் பதிலாக பயற றம் மாவு அல்லது கடலைமாவு மஞ்சள் என்பனவற்றை பூசிக்குளிப்போம். குளத்தின் அடியிலிருத்து பசுந்தான பொருக்குகளை சேகரிக்கு வைத்திருப்போம். இதை ஊறவைத்து பூசி குளிப்போம். இந்தக்கால சம்பூ



வகைகள் மண்டியிட வேண்டும் அவ்வளவுக்கு தலை பஞ்சு போல மென்மையாக கருகருவென வளரும். முடிந்தவர்கள் சீகைக்காய் அரைத்தும் முழுகுவார்கள். எங்கள் வீட்டின் பொருளாதாரம் சீகைக்காயை தள்ளியே வைத்திருந்தது.

இரணைக்காய் என்றொரு காய் இருக்கிறது மரம்தான் நிறைய காய்க்கும் அவை பழுத்து விழுந்தால் நாம் மடிகோலிப் பொறுக்கிக் கொண்டு போவோம். அதை உரலில் இடிக்க சலவைப்பவுடர் போல நுரைத்து வரும். அதை வாளியில் நீரில் கரைத்து அதனுடன் துணிகளை ஊறப்போட்டு துவைத்தால் பளிச்சிடும் வெண்மை. எல்லா வீடுகளிலும் துவைக்கும் கல் இருக்கும் அழுத்தமான முன்டபுறத்தைக் கொண்ட கற்கள் குளங்களிலும் குளிக்கும் துறைகளில் இருக்கும். துணிகளை ஊறப் போட்டு சடார் சடாரென அடித்து நச்நச்சென்று கும்பி அலசிப்பிழிந்து போட்டால் சலவை முடியும். ஆந்தநாட்களில் உண்மையான பட்டுப்பூச்சியிலிருந்து பெறும் பட்டும், பருத்தியிலிருந்து பெறும் பஞ்சும்தானே விரைவில் உடைகள் கிழிந்து போகும். எனவே அடித்து துவதை;தால் இப்படித்தான் ஆகும் என்று சன்லைட் நிறுவனம் உருப்பெருக்கியில் அடித்த துணியின் நூலிழைகளை காட்டி விளம்பரம் செய்த போது எங்கள் இல்லத்தரசிகள் அரண்டுதான் போனார்கள்.

ஆதன்பிறகு அம்மா முட்டைவிற்ற காசில் பன்னிரண்டு சதத்தை என்னிடம் தந்து 'ஓடிப்போய் அருணாசலங் கiடேல ஒரு சல்லேட் சவுக்காரம் வாங்கிக் கொண்டுவா' என்று பன்னிரண்டுசதம் தந்தனுப்புவாள். இது என் தந்தைக்கு தெரியக்கூடாது என்பதும் நிபந்தனை. காலம் செல்லச்செல்ல அடுத்த வீட்டுப்பெண்களும் இவ்வாறே அவர்களுடைய கணவனுக்கு தெரியாமல் சலவைதொழிலில் புரட்சி செய்தாலும், சன்லைட் வாசனை காட்டிக்கொடுக்க தவறவில்லை. முகத்தின் அழகை மிதமாக்க 'புசர்மா' எனப்படும் முகப்பவுடர்கள் வந்தன. அதிலும் குட்டிக்குரா ஒரு ஓரேஞ் வண்ண சப்பட்டை பேணி. முதலில் வந்தது. சோப் கம்பனிகளே அவர்களது பெயரில் முகப்பூச்சுகளையும் தயாரித்தன. ஒரு பட்டுப்புடவை வாங்கிக் கொடுத்தோ ஒரு நகை வாங்கிக் கொடுத்தோ தன் மனைவியின் சிணுங்கிய முகத்தை நேராக்க முடியாதவர்கள் ஒரு வாசச்சவுக்காரக்கட்டியாலோ ஒரு முகப்பவுடர் பேணியாலோ மிக இலகுவில் நேராக்க முடிந்தது. இப்படியாகவே மௌ;ள மௌ;ள எமது வாழ்க்கைக்குள் வந்த சோப் வகைகள். இன்று பல்கிப் பெருகி, கைகழுவ, முகம்கழுவ, தலை கழுவ, தலைக்கு சாயம் போட, சாம்போக்கள், உடலுக்கும் குளிக்கப்போட, குளிருக்குப்போட, உடைக்குப் போட, அதிலும் வாசனைக்கு அழுக்குக்கு என வகை பிரித்து வீடுகழுவ, கழிப்பறை கழுவ, குளியலறை கழுவ என விதம்விதமாக திரவமாகவும் திண்மமாகவும் எண்ணற்ற தாயாரிப்புகள் வந்து சந்தைகளில் நிறைந்து கிடக்கின்றன. நமக்கு என்ன தேவையோ அதை வாங்க வேண்டும் என்பதே நமக்கு மறந்து போச்சு. நம்மை சுற்றியிருப்பவர்கள் என்ன வாங்கினார்களோ அதெல்லாம் வாங்கியாக வேண்டும் என்பதே கட்டயமாக தெரிகிறது.

எங்காவது சலவைபண்ணும் கற்கள் இருக்கிறதா? ஏங்காவது துணி உலர்த்தும் கொடிகள் உண்டா அதுவும் கடைகளில் வாங்குகிறோம் அல்லவா? எங்காவது குளங்களில் குளிக்கமுடிகிறதா? அதுவும் அருகிப் போயிற்றே. நாம் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் பாட்டொன்றில் வருவது போல உமிக்குத்தி கைசலித்திட்டோம். ஆற்றிலே புளிகரைத்திட்டோம் என அவர் தமிழை நினைந்து வருந்தினார். நாம் தமிழர் பொருண்மிய வளத்தை நினைந்து வருந்து வேண்டிய காலம் இது. இப்பவும் காலம் கெட்டுப் போகேல்ல கடனே வாங்காமல் கையில் உள்ள பணத்துக்கு ஏற்ப வாழ பழகிழனாலே பாதி துயரம் போய்விடும்

தமிழ்க்கவி
சாகித்திய எழுத்தாளர்

மருதம் பசுமை நகர்

Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



0777 43 55 57

காலக்கவிதை

காலம்

காலம் ஒரு காட்டாறு; கட்டுக்குள் அடங்காது
காலமொரு கடலாகும்; கொந்தளிப்பு அதற்குண்டு
காலமொரு நீர் மேகம்; கண்ணீரும் பொழியுமது
காலமொரு ககனவெளி; கரந்துறையும் சூட்சுமங்கள்
காலமொரு நந்தவனம்; பூக்களதில் பூத்திருக்கும்
காலமொரு நதியாகும்; வளைவுகளும் அழகுதரும்
காலமொரு சிற்றோடை; சங்கீதம் அதற்குண்டு
காலமொரு காற்றாகும்; சூறைகளும் சுழன்றாடும்
காலமொரு அடர்காடு; மிருகங்கள் அதிலுண்டு
காலமொரு கடற்படுகை; முத்துக்கள் முகிழ்ந்துவரும்
காலமொரு நீர்க்கரையாம்; கழிவுகளை கரையொதுக்கும்
காலமொரு கவியரங்கு; சந்தங்கள் சிந்திவரும்
காலமொரு கச்சேரி; முகாரிகளும் தவழ்ந்துவரும்
காலம் ஓர் ஆசிரியன்; பாடங்கள் படிப்பிக்கும்
காலமொரு – தீர்ப்பாயம்; தீர்ப்பை அதே எழுதிவிடும்
காலமொரு – தீர்ப்பாயம்; தண்டனையும் அது வழங்கும்.
காலமடா காலமது காலம்!

காலக் கவிதை
கவிஞர் வழிவழகையன்